## தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 03 மூலதனச் செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டின் 30 சதவீதத்திலிருந்து 98 சதவீதம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் தொற்று நிலைமை மற்றும் கொடுப்பனவு செய்வதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை நிதிஏற்பாடு மேற்கொள்வதை கட்டுப்படுத்த வேண்டும். |

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சின் செலவில் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 22,160,324 பெறுமதியுடன் கூடிய சொத்துக்கள் முறையாக திணைக்களத்திற்கு பொறுப்பேற்று பதிவேடுகளுக்கு உட்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் நிதி அமைச்சின் செலவில் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் நிதி அமைச்சினால் தேவையான ஆவணங்கள் முறைப்படி இத்திணைக்களத்திற்கு 2020.12.31 இற்கு முன்னர் கையளிக்காமையால் அவற்றை பரீட்சித்து திணைக்களத்தின் புத்தகங்களுக்கு உட்படுத்தும் செயற்பாடுகள் தாமதமாகின. அச்செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | திணைக்களத்திற்குரிய சொத்துக்களை கையேற்றல் மற்றும் பதிவேடுகளுக்கு உட்படுத்தலை விரைவுபடுத்தல் |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10:1 ஆம் பந்திக்கு இணங்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 6 ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் திறைசேரி கணனி அச்சீட்டு பிரதிகளுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு திறைசேரி பதிவேட்டின் பிரகாரம் கட்டுநிதி கணக்கின் மீதியொன்றாயின் அம்மீதி திறைசேரிக்கு தீர்வுசெய்யப்பட வேண்டிய மீதியொன்றாக நிதி | திணைக்களத்தின் மொத்த கட்டுநிதி மீதி 2020.12.31 ஆந் திகதி தீர்வு செய்யப் பட்டுள்ளதால் 2020.12.31 ஆந் திகதி வரை மேலும் நடைமுறைப் பொறுப்புக்களாக உள்ளடக்க கட்டுநிதி மீதியொன்று காணப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழும் அம்மீதியே நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழும் காண்பிக்க வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி பதிவேட்டின் பிரகாரம் கட்டுநிதி மீதியான ரூபா 944,817 ஆன பெறுமதி அவ்வாறு காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10:1 ஆம் பந்திக்கு இணங்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 6 ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்று (ACA - C படிவம்) கிட்டிய அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று அவ்வாறு தயாரிக்கப்படாமை காரணமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(i) ஆண்டில் முற்பண அறவீடு ரூபா 11,214,584 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடு களிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 4,130,417 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 7,084,167 ஆல் காசு உட்பாய்ச்சல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.<br>(ii) முற்பணக் கொடுப்பனவு ரூபா 10,113,791 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கொடுப்னவு ரூபா 3,988,009 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10:1 ஆம் பந்திக்கு இணங்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று (ACA - C படிவம்) கிட்டிய அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

இதனால் ரூபா 6,125,782 ஆன காசு வெளிப் பாய்ச்சல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க கடன்களின் தரவுத் தளத்தை பராமரிப்பது திணைக்களத்தின் முக்கிய பணியாக இருந்தது. அக்கடனைப் பெற்றுக்கொள்ளல், திருப்பிச் செலுத்துதல் மற்றும் சேவை செய்தல் முறைமையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மற்றும் அது தொடர்பான ஏனைய தரப்பினரின் தகவல் தொடர்பான கணனியில் உள்ள தகவல்களை ஒரே நேரத்தில் புதுப்பிக்கும் வகையில் முறைமை உருவாக்கப்படாததால், அந்தத் தரப்பினர் மற்றும் திணைக்களத்தின் தகவல்களில் பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன. | | |
| | (I) இலங்கை மத்திய வங்கியின் பொதுக் கடன் திணைக்களத்தில் உள்ள வெளிநாட்டுக் கடன் சேவைகளுக்குரிய ரூபா 222.6 மில்லியன் பெறுமதி திணைக்கள முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 02 கடன் தொகைளுக்கு செலுத்தப்படும் முகவர் மற்றும் பிணை பொறுப்புக் கட்டணங்கள் வெவ்வேறு வகையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஏனைய கடன் கடன் ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் நேரடியாக ஒப்பந்தம் செய்யப்பட்ட திட்டங்களாகும். அதனுடன் தொடர்புடைய கடப்பாட்டுக் கட்டணங்கள் முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. | அனைத்து தொடர்புடைய தரப்பினருடனும் சரியாகவும் நாளதுவரையான தகவல்கள் உள்ளடக்கிய முறைமையொன்றை அபிவிருத்தி பேணிச்செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (II) | திணைக்களத்தின் முறைமையில் உள்ளடக்கப்பட்ட வெளிநாட்டு கடன் சேவைக்குரிய ரூபா 461 மில்லியன் பெறுமதியொன்று இலங்கை மத்திய வங்கியின் அரச கடன் திணைக்களத்தின் தகவல்களில் வில்லை. | ஒப்பந்தத்தின் படி, இக்கடனிற்காக பயன்பாட்டுக் காலத்தில் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் மூலதனமாக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் அந்நிறுவனங்களுக்குரிய மூலதனமாக்கப்பட்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் முறைமையில் சேர்க்கப்பட்ட போதும் பணம் செலுத்தாததன் காரணமாக அவை மத்திய வங்கியின் தகவலில் உள்ளடக்கப்படவில்லை | - மேற்படி - |
| (III) | திணைக்களத்தின் முறைமையில் உள்ளடக்கப்பட்ட 02 வெளிநாட்டுக் கடன்களுக்குரிய ரூபா 1,337 மில்லியனான கடன் மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | கடன் வழங்குபவரின் தாமதம் காரணமாக ஒவ்வொரு கடன் தொகைக்காக 2019 ஆம் ஆண்டிற்கான கடன் மற்றும் வட்டித்தொகை 2020 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டுள்ளதுடன் முறைமையில் உரிய திகதிகள் பதிவு செய்தல் இடம்பெற்றுள்ளது. மேலும் இரண்டு கடன்கள் குறைத்து அல்லது கூடுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் வேறுபாடன ரூபா 10 மில்லியன் தொகை இலங்கை மத்திய வங்கியின் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு கிடைக்கப் பெற்ற போதும் முறைமையில் 2021 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (IV) | 2020 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வெளிநாட்டு இரண்டு கடன் உருப்படி களுக்கு உரிய ரூபா 4,399 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் மீதிகள் திணைக்கள முறைமையிலும் 2020 அரசின் நிதிக்கூற்றுக்களுக்கு இடையே வேறுபட்ட பெறுமதியொன்று காணப்பட்டது. | மேற்படி ரூபா 10 மில்லியனுக்கு மேலதிகமாக மற்றுமொரு கடன்தொகை இலங்கை மத்திய வங்கியின் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு கிடைக்கப் பெற்ற போதும் முறைமையில் 2021 ஆம் ஆண்டிலே சேர்க்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (V) அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 22,369 மில்லியனான கடன் மீதி திணைக்கள முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | இத் தொகை இலங்கை மத்திய வங்கியின் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு 2020.12.15 ஆந் திகதி செலவு வைக்கப்பட்டிருந்த போதும் திணைக்கள முறைமையில் 2021 ஆம் ஆண்டிலே சேர்க்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஆ) வெளிநாட்டு உதவிகளைப் பெறுதல் மற்றும் செயற்திறனாகப் பயன்படுத்துதல் தொடர்பாக திணைக்களத்தினால் உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவது திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும், இது தொடர்பில் பொது திறைசேரியால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டது. | | - மேற்படி - |
| (I) 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய வெளிநாட்டு உதவி கணக்கு வைப்பிற்குரிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவி தொடர்பாக அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் தெரிவு பரிசோதனையின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பொது திறைசேரியின் அறிவூட்டலொன்று இல்லாமல் 24 நிறுவனங்களினால் 77 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,026 மில்லியன் வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | இந்த திணைக்களத்தின் மூலம் மற்றும் ஏனைய அனைத்து திணைக்களங்கள் மற்றும் கூட்டிணைப்புடன் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங் களுக்கு வெளிநாட்டு மானியங்களைப் பெறுவதற்கான சரியான வழிமுறையை அறிந்து அதற்கேற்ப செயற்படுமாறு சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (II) | அவ்வாறே தெரிவு அடிப்படையில் பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் அவ்வாறு பொது திறைசேரிக்கு அறிவிக்காமல் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களால் மொத்தம் ரூபா 1,266 மில்லியனானன வெளிநாட்டு உதவிகள் நேரடியாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைளின் பிரகாரம் நிதிஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வது அமைச்சு செயலாளரின் பொறுப்பாகும். | - மேற்படி - |
| (இ) | திணைக்களத்தின் பிரதான நோக்கங்களுக்கு இடையே முன்னனி துறை அபிவிருத்தி நிதியளிப்பதற்காக ஏற்கக் கூடிய கிரயமொன்றின் கீழ் வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்வதற்கும் வெளிநாட்டுக் கடனை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்காக வசதிகள் செய்தல் உட்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் காரணமாக அந்நோக்கங்களை அடைந்து கொள்ளும் போது திணைக்களத்தின் ஈடுபாட்டில்லாமல் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பது தொடர்பாக கணக்காய்வில் கேள்விக்குரியாக இருந்தது. | | - மேற்படி - |
| (I) | 2020 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டு பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி 1,281.1 மில்லியன் அ.டொ. கடனாக இருந்ததுடன் அதில் 39 சதவீதம் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட 500 மில்லியன் அ.டொ. கடன் சந்தை கடனாக இருந்ததமை அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட கோவிட் தொற்றுநோய் நிலைமை உட்பட நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் பிற காரணிகள் காரணமாக மிகவும் விரிவான நாட்டின் சென்மதி நிலுவை பற்றாக்குறையை தீர்வுசெய்தல் உட்பட விடயங்களுக்காக ரூபா 500 மில்லியன் அ.டொ கடன் வசதியை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவையால் வழங்கப்பட்ட ஆலோசணையின் பிரகாரம் நிதி அமைச்சிற்காக இத்திணைக்களத்தினால் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | உரிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது | |
| (II) | நடப்பாண்டில் 4,057 மில்லியன் அ.டொ. கடனிற்காக சேவை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 1,419.4 மில்லியன் அ.டொ. அதாவது 35 சதவீதம் மாத்திரம் கடன் வட்டி கொடுப்பனவாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாண்டில் உடன்படிக்கை செய்து பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன் மிக உயர்ந்த பெறுமதியொன்றை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் இறுதி வெளிநாட்டுக் கடன் அளவு 35 மில்லியன் அ.டொ. இற்கு அண்மித்ததாக இருந்தன. அதன் பிரகாரம் வருடாந்தம் செலுத்த வேண்டிய வட்டி அளவு தற்போது அதிகரித்துள்ளது. | - மேற்படி - |
| (III) | வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போது உடன்படிக்கை செய்த தொகையில் பயன்படுத்தாத பெறுமதிக்காக உடன்படிக்கையின் பிரகாரம் அநேகமான சந்தர்ப்பங்களில் அரசினால் பாரியளவு செலவினமொன்று மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக உடன்படிக்கை பிரகாரம் உரிய காலப்பகுதியில் கடன்தொகை பெற்றுக்கொண்டு உரிய செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்தி அச்செயற்திட்டத்திலிருந்து கிடைக்கும் நலன்களிலிருந்து கடன் வட்டி மற்றும் தவணைக் கொடுப்பனவு வினைத்திறனாக கடன் முகாமைத்துவம் மூலம் இடம்பெற வேண்டிய போதிலும் வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்வது தொடர்பாக தெரிவு பரிசோதனையின் போது அவ்வாறு இடம்பெறாத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | - |

| | | | |
|---|---|---|---|
| (i) | **கடன் இலக்கம் 2015025** மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 76 மில்லியன் அ.டொ. 05 ஆண்டு சலுகை காலத்துடன் 26 ஆண்டுகளில் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு 2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் 17 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டது. அக்கடன் தொகையில் பயன்படுத்தாத கடனுக்காக தொகைக்கு 0.15% பொறுப்புக் கட்டணத்தைச் செலுத்த ஒப்புக் கொண்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2020 ஜூன் 20 ஆந் திகதி அளவில் கடனைப் பெற்று பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அக் கடன் தொகையில் 31,973,267 மில்லியன் அ.டொ. மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, கடன் தொகையில் 58 சதவீதம் அல்லது 44,026,733 அ.டொ. பயன்படுத்தப்பட வில்லை. அதற்காக 0.15% பொறுப்புக் கட்டணமாக, 2020 ஜூன் மற்றும் திசெம்பர் மாதங்களில் ரூபா 14,410,871 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | தகைமையுடைய ஒப்பந்தக்காரரிடம் போதியளவு நிதி இயலளவு இல்லாமையால் 2020 இ திசெம்பரில் மற்றொரு நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதன்படி, திட்டமிட்டபடி முன்னேற்றம் இல்லாததால் ஒப்பந்ததாரர்களின் செயன் முன்னேற்றத்தை திட்டமிடப்பட்ட திகதியில் அடைந்து கொள்ள முடியவில்லை. | உடன்படிக்கை செய்த கடன்தொகையை செயற்திறனாகவும் விரைவாகவும் பயன்படுத்துவதன் மூலம் அரசிற்கு ஏற்க வேண்டிய மேலதிக செலவினத்தை குறைத்துக் கொள்ளல் |
| (ii) | **கடன் இலக்கம் 2015019**<br><br>படல்கம பால் விநியோக நிலையத்தை நிறுவுவதற்கான திட்டச் செலவுக்கு நிதியளிப்பதற்காக HCBC ஏற்றுமதி கடன் வசதியின் கீழ் 56,580,214 கடனை 3 வருட சலுகை காலத்துடனும் 13 வருட திருப்பிச் செலுத்தும் காலத்துடன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இக்கடன் | காணிளை கையேற்பதில் ஏற்பட்ட தாமதம், இயந்திரங்களை நிர்மாண இடத்தை அடைவதில் தாமதம் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் போன்ற காரணங்களால் செயற்திட்டத்தை குறித்த நேரத்தில் பூர்த்தி செய்ய முடியவில்லை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொகையில் பயன்படுத்தாத மீதிக்காக வருடாந்தம் 0.5% இணக்கப்பாட்டுக் கட்டணத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்கும் அவ்வாறே 9,975,863 யூரோ கடன்தொகையொன்று 02 வருட சலுகை காலத்துடன் 06 ஆண்டு திருப்பிச் செலுத்தும் காலத்துடன் பெற்றுக் கொள்வதற்கும் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி உடன்படிக்கையொன்று செய்யப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அக் கடன் தொகையில் 59,190,497 யூரோ மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் அத்திகதியில் பயன்படுத்தப்படாத பெறுமதி 7,365,580 யூரோ ஆக இருந்தது. அதன் பிரகாரம் பயன்படுத்தப்படாத அப்பெறுமதிக்காக உடன்படிக்கை பிரகாரம் 0.5% வருடாந்த இணக்கப்பாட்டுக் கட்டணமாக ரூபா 7,890,913 தொகை மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (iii) | கடன் எண். 2007029<br><br>இரத்மலானை / மொறட்டுவ மற்றும் ஜா-எல / ஏகல பகுதிகளில் உத்தேச கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 92,405,459 அ.டொ. கடன் தொகைக்காக ஒப்பந்தத்தின்படி பயன்படுத்தப்படாத கடன் மீதியின் பேரில் நிர்வாகக் கட்டணத்தின் கீழ் ஆண்டுக்கு 0.03 சதவீதம் அரையாண்டுக் கட்டணம் செலுத்த வேண்டும். 2020 ஆம் ஆண்டில் அதற்காக, ரூபா 3,149,851 செலுத்தப்பட்டிருந்தது. | 2016.06.30 ஆந் திகதி 2,655,196.71 அ.டொ. கடன் தொகை இரத்து செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், எனவே இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் பயன்படுத்தப்படாத மீதியொன்று காணப்பட வில்லை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கடன் எண். 2007029<br><br>பதுளை முதல் செங்கலடி வரையிலான A-5 வீதியை புனர்நிர்மாணம் செய்வதற்காக சவூதி நிதியத்திலிருந்து 6 மில்லியன் அ.டொ. கடன்தொகை அதாவது 225,000,000 சவூதி ரியால்களை 05 வருட சலுகைக் காலத்துடன் 25 வருட திருப்பிச் செலுத்தும் அடிப்படையிலும் பயன்படுத்திய மற்றும் தீர்வு செய்யாத தொகை அடிப்படையில் வருடாந்தம் 2 சதவீத வட்டி வீதத்திற்கு உட்பட்ட வகையில் பெற்றுக் கொள்வதற்கு 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.<br>இக்கடன் தொகைக்குரிய 2014, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மொத்தமாக 45 மில்லியன் அ.டொ. பெற்றுக் கொண்டிருந்த போதிலும் கடன் பெற்றுக் கொள்ளல் 2018 ஆம் ஆண்டில் என அவதானிக்கப்பட்டது. மேலும் 2018 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கடனை பெற்று பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 திசம்பர் 31 ஆந் திகதி அதில் மேலும் 157,246,745 சவுதி ரியால்கள் அல்லது சுமார் 70 சதவீதம் கடன் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. | சாத்திவள ஆய்வு, வீதி திட்டம், காணி கையேற்றல் மற்றும் பெறுகை செயற்பாட்டில் தாமதம் காரணமாக ஒப்பந்தம் 218 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (IV) | இலங்கை அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் 2019011 ஆம் இலக்க "இலகு புகையிரத சேவை முறைமை" செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன | | - |

| | | | |
|---|---|---|---|
| (i) | குறித்த கடன் உடன்படிக்கை முடிவடைந்த காரணத்தினால் அச்செயற்திட்டத்திற்குரிய (முன்னைய கட்டணங்கள் (Front End Fee) என ஏற்கனவே செலவிடப்பட்டுள்ள 60,080,000 யப்பான் யென் ¥ தொகை தொடர்பாக எடுக்கப்படும் எதிர்வரும் நடவடிக்கை தொடர்பாக இதுவரை தீர்மானத்திற்கு வராமல் இருந்ததுடன் பெற்றுக் கொண்ட கடன் தொகையை மீளச் செலுத்தும் சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு இருப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் தொகையை மீளச் செலுத்தும் சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வர உள்ளது | சரியான ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வு அடிப்படையில் செயற்திட்டங்கள் மற்றும் செயற்திறனான பயன்பாட்டிற்காக வசதிகள் வழங்கப்பட வேண்டும். |
| (ii) | அவ்வாறே 2020 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் மதியுரை ஒப்பந்த உடன்படிக்கையை பூர்த்தி செய்த காரணத்தினால் குறித்த மதியரை நிறுவகத்தினால் நட்டங்கள் மற்றும் சேதங்களுக்காக US $ 23,657,761 உட்பட US$ 31,364,767 இற்காக உரித்து மற்றும் இருந்ததுடன் மொத்த உரித்து கோரலுக்கு ஒப்பாக நட்ட சேதங்களை அறவிடும் சதவீதம் 75 சதவீதமாக இருந்தது. | இதற்குரியதாக இரண்டு தடவைகள் கூடியிருந்ததுடன் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (iii) | 2021 சனவரி 19 ஆந் திகதி வரை உரிய கடன்தொகையில் 2,905,525 ஜப்பான் யென் ¥ அதாவது ரூபா 4,886,234,915 தொகை பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் அக்கடன் உடன்படிக்கை முடிவுறுத்த நேர்ந்த காரணத்தினால் பயன்படுத்திய தொகையை மீண்டும் கொடுப்பனவு செய்யும் முறை தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு இதுவரை வந்திருக்கவில்லை. | குழுவின் தீர்மானத்தின் பேரில் இந்த உடன்படிக்கைக்குரிய எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2021 சனவரி மாதம் வரையில் இச்செயற்திட்டத்தின் அலுவலகத்தை மூடியமை உட்பட செயற்திட்டத்தின் அடுத்த நடவடிக்கைகளை முடிவுறுத்துதல் உட்பட செயற்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்படவில்லையென அறிக்கையிடப்பட்டிருந்தது.அவ் வாறே கோவைகளின் பிரகாரம் இச்செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதுடன் இணைந்ததாக மாற்று செயற்திட்டமொன்ற தொடர்பாக தகவல்கள் மற்றும் ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மதியுரை சேவைகள் அளவு வேறு செயற்திட்டமொன்றுக்காக செயற்திறனாக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்ட போதும் அது தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் காணப்படுவால் இதுவரை அதன் செயன் முன்னேற்றம் தொடர்பாக இத்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை | - மேற்படி - |
| (ஈ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு செயலாற்றல் அறிக்கையின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.8 நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயன்முன்னேற்றம் 100 சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அமைச்சினால் நவீனமயப் படுத்தலுக்காக செலவிடப்பட்ட செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் குறைவாக அறிக்கையிட்ட காரணத்தினால் நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயன்முன்னேற்றம் அதன் பிரகாரம் இல்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வரைவு செயலாற்றல் அறிக்கையின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.8 நிதியல்லாத சொத்துக்கள் குறைத்து பதிவு செய்யட்டமை செயலாற்றல் அறிக்கையில் சீராக்கப்பட்டது | சரியான மற்றும் நாளதுவரையான தகவல்கள் பேணப்படுதல் மற்றும் அறிக்கையிடல் வேண்டும் |
| (உ) | வரைவு செயலாற்றல் அறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுபேறுகளை கருத்திற் கொள்ளும் போது | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுபேறுகளுக்கிடையே வேறுபாட்டிற்கு பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தன. | முன் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு முகாமைத்து வத்தை முறைமைப்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| எதிர்பார்த்த பெறுபேறுகளை தீர்மானிக்கும் போது முறையே 147 மற்றும் 190 ஆக குறிப்பிடப்பட்டிருந்த. அதன் காரணமாக அது குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் எதிர்பார்த்த கடன் அளவினை விட ஆண்டின் போது கடன் பெறுபெயொன்று உருவாகி இருந்ததுடன் அது அரசின் கடன் இணைப்பு அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது. | 1. சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட 500 மில்லியன் அ.டொ கால கடன் வசதிகள் 2020 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த பெறுபேறுகளுக்காக உள்ளடக்கப்படாமை.<br><br>2. ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு இருந்த கடன் தொகை கொவிட் - 19 நிலைமை காரணமாகவும் உலக வங்கி (WB) மேலதிக நிதியத்தின் ஈடுபடுத்தியமை | |

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சின் செலவில் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 22,160,324 பெறுமதியுடன் கூடிய சொத்துக்கள் முறையாக திணைக்களத்திற்கு பொறுப்பேற்று பதிவேடுகளுக்கு உட்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் நிதி அமைச்சின் செலவில் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் நிதி அமைச்சினால் தேவையான ஆவணங்கள் முறைப்படி இத்திணைக்களத்திற்கு 2020.12.31 இற்கு முன்னர் கையளிக்காமையால் அவற்றை பரீட்சித்து திணைக்களத்தின் புத்தகங்களுக்கு உட்படுத்தும் செயற்பாடுகள் தாமதமாகின. அச்செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | திணைக்களத்திற்குரிய சொத்துக்களை கையேற்றல் மற்றும் பதிவேடுகளுக்கு உட்படுத்தலை விரைவுபடுத்தல் |